මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

DEPARTMENT OF MUSLIM RELIGIOUS AND CULTURAL AFFAIRS

තැපැල් පෙට්ටිය 543, අංක. 180, ටී.බී. ජායා මාවත, කොළඹ - 10.

தபால் பெட்டி : 543, இல. 180, ரி.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு – 10.

P.O. Box : 543, No. 180, T.B. Jayah Mawatha, Colombo - 10.

E-mail : director@muslimaffairs.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No. MRCA/R/08/01/01 | ඔබගේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2021.12.15

தலைவர் / செயலாளர்,

………………………………...

………………………………...

**முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அரபுக்கல்லூரிகளினால் வழங்கப்படும் ஆவணங்களை உறுதிப்படுத்துவதற்கான விதிமுறைகள்.**

1. அரபுக் கல்லூரி திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
2. அரபுக் கல்லூரியினால் வழங்கப்படும் ஆவணங்கள் இலங்கையின் அரச கரும மொழிகளான சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம் மூலம் அமையப்பெற்றிருத்தல் வேண்டும்.
3. Diploma, Higher Diploma, Higher studies, Higher Education, Degree, licentiate போன்ற வாசகங்கள் இலங்கை பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரமே பயன்படுத்தப்படுவதால், மேற்குறித்த வாசகங்களை தங்களால் வழங்கப்படும் ஆவணங்களில் சேர்த்துக்கொள்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.
4. கல்லூரியினால் வழங்கப்படும் சான்றிதழ்களில் ஒப்பமிடுபவர்கள் தொடர்பான பெயர், பதவி மற்றும் மாதிரி ஒப்பங்கள் திணைக்களத்திற்கு வழங்கப்படல் வேண்டும்.
(மாற்றங்கள் ஏற்படும் போது அவ்வப்போது திணைக்களத்திற்கு அறிவிக்கவேண்டும்)
5. தங்களின் கல்லூரியினால் தயாரிக்கப்படும் சான்றிதழ்களின் பிரதி ஒன்றினை மாதிரி சான்றிதழ் என எழுதப்பட்டு (Specimen) திணைக்களத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும். (சான்றிதழ்களின் வடிவங்களை மாற்றுவதாயின் திணைக்களத்திற்கு அது தொடர்பாக அறியத்தரவும்)
6. கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை பட்டம் பெற்றவர்கள் தொடர்பான முழுப்பெயர், முகவரி, தே.அ.அட்டை இலக்கம் போன்ற தகவல்கள் ஆண்டடிப்படையில் கல்லூரியினால் சான்றுபடுத்தி திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
7. கல்லூரியினால் வழங்கப்படும் பட்டத்தின் தன்மை சான்றிதழில் ( மௌலவிச் சான்றிதழ் / ஹிப்ழு சான்றிதழ்) என்று தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.
8. கல்லூரியில் கற்பிக்கப்படும் பாடத்திட்டத்தின் பிரதி ஒன்று எமது திணைக்களத்திற்கு வழங்கப்பட வேண்டும்.

எனவே, மேற்படி விடயங்கள் அரபுக்கல்லூரிகளினால் பூர்த்திசெய்யபடாத பட்சத்தில் தங்களினால் வழங்கப்படும் ஆவணங்கள் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்படமாட்டாது என்பதனை அறியத்தருகிறேன்.

ஐ. அன்சார்

பணிப்பாளர்,

இப்ராஹிம் அன்சார்
பணிப்பாளர்
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
180, ரி.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு - 10